இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2002 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

(2002 யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினது ஆணைப்படி அச்சிடப்பட்டது.

2002 ஒகத்து மாதம் 02 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

2002 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ— ஓ. $\frac{57/2001}{4667}$

1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். குறுங்கப்பெயர்.

2. 2001 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் —

"(இஇ) அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் கோதுமையின் அல்லது கோதுமை மாவின் பெறுமதி ;

(இஇஇ) அத்தகைய ஆளினால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கோதுமை மாவின் அல்லது பாணின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படிகள் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. 2001 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில் "2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் "என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2001 ஒற்றோபர் 1 ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(க) 2001 ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கு :-

(i) 2001 ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று தொடங்கி 2001 ஒற்றோபர் 12 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு –

(அ) அவ்வாளின், இவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஏழரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரச் சாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியினின்று அல்லது உற்பத்தியினின்று எழுகின்ற அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச்சதவீதத்திற்கும்.

சமமான தொகையொன்று, 2001 நவெம்பர் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் :

(ii) 2001 ஒற்றோபர் 13 ஆந் தேதியன்று தொடங்கி 2001 நவெம்பர் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு –

(அ) அவ்வாளின், இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரசாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியினின்று அல்லது உற்பத்தியினின்று எழுகின்ற மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்,

சமமான தொகையொன்று, 2001 திசெம்பர் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் ; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுத் தொகை, இப்பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைத்து, அக்காலாண்டின் இறுதியை உடனடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் ; அத்துடன்

(ங) 2002, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் –

(i) அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கு –

(அ) அவ்வாளின், இவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திரசாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதி யினின்று அல்லது உற்பத்தியினின்று எழுகின்ற அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்,

சமமான தொகையொன்று அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு–

(அ) அவ்வாளின், இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது

லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திரசாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியினின்று எழுகின்ற மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்.

சமமான தொகையொன்று அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுத் தொகை, இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைத்து அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;"

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

4. 2001 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :–

(1) அவ்வட்டவணையின் 12 ஆம் விடயத்தில், "2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2001 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2001 ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(13) 2001 ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கு –

(i) (அ) 2001 ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2001 ஒற்றோபர் 12 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு எழுகின்ற (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்தவிற்பனை வரவின் மீது .... 7.5 சதவீதம்

(ஆ) 2001 ஒற்றோபர் 13 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2001 திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு எழுகின்ற, (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் மீது .... 6.5 சதவீதம்

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார்கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திர சாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவின் மீது .... 0.5 சதவீதம்

(14) 2002 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் –

(i) இவ்விடயத்தின் (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் மீது .... 6.5 சதவீதம்

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திர சாதனத்தின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவின் மீது ....0.5 சதவீதம் ".

5. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 2001 ஒற்றோபர் 13 ஆம் தேதியன்று தொடங்கி, இச்சட்டமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாகச் சான்றுப்படுத்தப்படுகின்றதோ அத்தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, பொறித் தொகுதி, எந்திரசாதனம் அல்லது உபகரணம் ஒன்றல்லாத பொருளொன்றின் இறக்குமதியாளரிடமிருந்து அத்தகைய பொருளின் பெறுமதியின் ஏழரைச் சதவீதத்திற்குக் குறைந்த ஆனால் ஆறரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையொன்றைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் எதிராக சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்திரவாதமளிக்கவும்படுகின்றார். செல்லுபடியாக்குதல்.

6. இச்சட்டம் எவ்வாளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அவ்வாள் 2001 ஒற்றோபர் 13 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் அத்தேதியன்று இச்சட்டமானது பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுப்படுத்தப்படுகின்றதோ அத்தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு தேசிய பாதுகாப்பு அறவீடாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் தொகையைச் செலுத்துமாறு, நாடு காக்கும் உதவுதொகை (நீக்குதல்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் தொழிற்பாட்டின் காரணத்தினால் ஆளாகின்றவிடத்து, அத்தகைய ஆள், இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தொகையைச் செலுத்தினால் எல்லா நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தினால் நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுடன் அவர் இணங்கியொழுகியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய தொகையானது அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமெனச் சான்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் பின்னர் அத்தகைய தொகையானது தவணை தவறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள் அத்திகதியிலிருந்து தவணை தவறிய ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவுக்கு இச் சட்டத்தின் —

(அ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் பந்தியினால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இரண்டாம் பிரிவின் (2) ஆம் பந்தியினால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் 13 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.